# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 14 திங்கட்கிழமை 30.09.2024 கதிர் 373







# ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைக்கு ஜனாதிபதி தலைமையில் புதிய பிரிவு

## விரைவில் அமைக்கப்படும் என்கிறார் பிரதமர் ஹரிணி

ஊழல், மோசடிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப் பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையில் விசாரணைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பில் நேர்காணல் ஒன்றில் இதனைத் தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, "ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையில் விசாரணைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இதனை விரைவாக அமைப்பதற்கு நாம் திட்டமிடுகின்றோம்" என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த பிரதமர் ஹரிணி அமர சூரிய, "கடந்த காலங்களில் எம்மால் தெரிவிக்கப்பட்ட பல ஊழல்கள் தொடர்பாகவும், அண்மைக்காலத்தில் தெரிவிக்கப்பட்ட சில விவகாரங்கள் குறித்தும் இதன் மூலமாக விசாரணைகளை முன்னெடுப்போம்" என்றும் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது நடைமுறையில் உள்ள ஊழல்களுக்கு எதிரான சட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதை அரசாங்கம் உறுதிப்படுத்தும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசேகர தெரிவித்தார்.



## ஜனாதிபதியின் இரு உத்தரவுகளுக்கு தடைவிதிக்கும் தேர்தல் ஆணைக்குழு




ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் இரண்டு உத்தரவுகளுக்கு தேர்தல் ஆணைக்குழு தடை விதித்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இன்று திங் கட்கிழமை வெளியான அந்த இணை யத்தளத்தின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விவசாயிகள் மற்றும் கடல் தொழிலாளர்களுக்கு வழங்கு மாறு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவினால் அறிவிக்கப்பட்ட உரம் மற்றும் எரிபொருள் மான ியத்தை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

விவசாயிகளுக்கு 25,000 ரூபா உர மானியமும் கடல் தொழி லாளர்களுக்கு எரிபொருள் மானியமும் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.

தேர்தல் அறிவிக்கப்படும் போது, அத்தகைய மானியங்களை வழங்குவதில் வேட்பாளர்களுக்கு ஏற்படும் பாதகத்தை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேர்தல்

2➤

## தேசியப் பட்டியல் ஆசனங்கள் குறித்து உறுதி தரமுடியாது

### சஜித் தெரிவிப்பு

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியிடும் பங்காளிக் கட்சிகள், தேர்தலுக்கு முன்னரே கோரும் தேசியப்பட்டியல் ஒதுக்கீட்டுக்கு உத்தரவாதமளிக்காதிருக்க கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாச தீர்மானித்திருப்பதாக அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் கூட்டணியில் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமிழ் பேசும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

2➤



## தேர்தலுக்குத் தேவையான நிதி ஜனாதிபதியால் ஒதுக்கப்பட்டது

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபா தேவையென தேர்தல் ஆணைக்குழு கோரிய தொகையை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடுவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர்நாயகம்சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தொடர்பாக இரண்டு சந்திப்புகள் நேற்று இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றன. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தல் நவம்பர் 14 நடைபெறும் என்பதுடன், வேட்புமனு தாக்கல் செய்வதற்கான இறுதித் திகதி அக்டோபர் 4 எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பொதுத் தேர்தலுக்குத் தேவையான மொத்த நிதித்

2➤

## சஜித் அணியுடன் இணைந்தே பொதுத் தேர்தலில் போட்டி

### மனோ கணேசன் அறிவிப்பு



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ள தாகத் தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் அர சியல் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அதன் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டத்தில்

2➤

# கைத் துப்பாக்கிகளை உடன் ஒப்படையுங்கள்

## எம்.பி.க்களிடம் அரசாங்கம் கோரிக்கை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட கைத் துப்பாக்கிகளை பாதுகாப்பு அமைச்சிடம் தாமதமின்றி திருப்பி ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிகளைப் பெற்ற முன்னாள் எம்.பி.க்களுக்கு, தனித்தனியாகக் கடிதம் அனுப்பியுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் 100க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக கைத் துப்பாக்கிகளை பெற்றுள்ளதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

முன்னாள் எம்.பி.க்கள் தங்களது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக குறைந்தபட்சம் இரண்டு துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதிப்பது என முந்தைய அரசாங்கம் எடுத்த முடிவைத் தொடர்ந்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக ஆகஸ்ட் மாதம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அப்போதைய அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன, நாட்டில் நிலவும் வன்முறை போக்கு காரணமாக, முன்னாள் எம்.பி.க்கள் இரண்டு துப்பாக்கிகளை வைத்திருக்கும் புதிய கொள்கையை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்ததாக தெரிவித்தார்.

# ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் தனியார் மயப்படுத்தப்படாது

## அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தும் திட்டத்தினை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நஷ்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சினை தனியார் மயப்படுத்தும் முன்னைய அரசாங்கத்தின் திட்டத்தினை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவிடவுள்ளது.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் அவசியத்தை கருத்தில் கொள்ளும்போது இலங்கையின் தேசிய விமானசேவையான ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நாட்டிற்கு சொந்தமானதாக காணப்படவேண்டும் என அரசாங்கம் கருதுவதாக தேசிய மக்கள் சக்தியின் பேரவையின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஸ்ரீ லங்கன் எயர்லைன்சினை தனியார மயப்படுத்தப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். எனினும் அதன் முகாமைத்துவத்தினை சீர்செய்வதற்கான திட்டமொன்று முன்வைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# லொறி மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

பாணந்துறை பள்ளிமுல்ல பகுதியில் சட்டவிரோதமாக மாடுகளை ஏற்றிச்சென்ற லொறியொன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் ஒருவர் காயமடைந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

காயமடைந்த நபர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# முன்னாள் எம்.பியின் கார் தலைகீழாகக் கவிழ்ந்தது

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மொனராகலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்நாயக்கவின் கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று மொனராகலை பிபில வீதியின் நக்கலவத்தை பகுதியில்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்நாயக்க காரைச் செலுத்திச் சென்றுள்ள நிலையில் வாகனத்துக்குள் குளவி ஒன்று புகுந்துள்ளது.

அந்தக் குளவியை கையால் விரட்ட முற்பட்டபோது காரைக்கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ள நிலையில் வீதியை விட்டு விலகிய கார் வீதியோரத்தில் இருந்த மண் குவியலில் மோதி தலைகீழாகக் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்குக் காயம் ஏற்படவில்லை. ஆயினும், அவரது வாகனம் சேதமடைந்துள்ளது.

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தலின் பின்னர் உரிய கொள்கை தீர்மானங்களை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதிக்கு அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த மானியங்கள் நாளை முதல் நடைமுறைப்படுத்தப்பட இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு உத்தரவுகளையும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்தபோது நடைமுறைப்படுத்துமாறு பணிப்புரை விடுத்திருந்த போதிலும், தேர்தல்கள் ஆணைக்குழு அதனை இடைநிறுத்தியிருந்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலுக்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொகையாக எதிர்பார்க்கப்படும் 11 பில்லியன் ரூபாவை விடுவிப்பதற்கான உரிய ஆவணத்தில் ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் நாயகம், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதி மாவட்டச் செயலாளர்கள் கலந்துகொண்டு முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், இரண்டாவது கலந்துரையாடலில் மாவட்ட தேர்தல் ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்களுக்கு இடையேயான மற்றுமொரு கூட்டம் நேற்று பிற்பகல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த கூட்டங்களில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது என்றார்.

## தேசியப் பட்டியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த கட்சிகள் கணிசமான வாக்குகளை பெற்றால் தேசியப்பட்டியல் ஆசனங்களை கோரும் என்பதுடன் அதற்கு முன்னரே அதற்கான உத்தரவாதத்தை கோரும் ஒப்பந்தங்களை கைச்சாத்திட கோரிக்கை விடுக்கும் என்பதால், தேர்தலுக்கு முன்னர் அவற்றுக்கான இணக்கப்பாடுகளை வெளியிடாதிருக்க சஜித் தீர்மானித்துள்ளதாக மேலும் தெரியவந்தது.

சஜித்தின் இந்த தீர்மானத்தால் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக்கட்சிகள் தடுமாற்றமடைந்திருப்பதாக அறியமுடிகின்றது. இது தொடர்பில் சஜித்துடன் பேச்சு நடத்தி இறுதித் தீர்மானத்தை எடுக்கவும் அக்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, பொதுத் தேர்தலில் தோல்வியடையும் எவருக்கும் தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கக்கூடாதென சஜித் பிரேமதாசவிடம் அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

## சஜித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்னணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் உள்ளிட்ட கூட்டணியின் அரசியல் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# மட்டக்களப்பு மாவட்டத்தில் களமிறங்கும் சுயேச்சை அணி

## இன்று கட்டுப் பணம் செலுத்தினர்

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது கட்டுப்பணம் இன்று திங்கட்கிழமை செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தமிழ் உணர்வாளர்கள் அமைப்பினால் இந்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தலைமையில் இந்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இம்முறை தமிழ் உணர்வாளர் அமைப்பின் சார்பாக சுயேட்சையாக களமிறங்கவுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்று தேர்தல் தொகுதிகளிலும் எட்டுப்பேரை களமிறக்கவுள்ளதாவும் தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்தார்.

ஊழல்கள்,மோசடிகள் அற்ற அரசியலை முன்னெடுப்பதற்காகவே தாம் களமிறங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி "சங்கு" சின்னத்தில் களமிறங்கும்

## கோவிந்தன் கருணாகரம் இன்று அறிவிப்பு

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக குத்துவிளக்குக்கு பதிலாக சங்கு சின்னத்தில் களமிறங்கவுள்ளதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இன்று திங்கட்கிழமை அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலளார் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியத்தின் மீது பற்றுக்கொண்ட இளைஞர்களை இணையுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் அழைப்பு தொடர்பில் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் எனவும் கருணாகரம் தெரிவித்தார்.

# சகாதேவராஜாவுக்கு கோரக்கரில் கௌரவம்



சம்மாந்துறை வலயத்தில் கடந்த 36 வருடங்கள் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜாவிற்கான கௌரவிப்பு விழா கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் எஸ்.இளங்கோபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அவரது சேவையை பாராட்டி அதிபர் ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.மோகன் கலந்துகொண்டு வாழ்த்தி உரையாற்றினார். நிகழ்வில் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.




# தமிழாசான் தவநாயகம் காலமானார்

(வி.ரி. சகாதேவராஜா)



காரைதீவைச் சேர்ந்த பிரபல தமிழ்ப் பற்றாளர் தமிழாசான் ஓய்வு நிலை அதிபர் கலாபூஷணம் பொன். தவநாயகம் தனது 89 வது வயதில் மட்டக்களப்பில் நேற்று காலமானார்.

அவரது இறுதி யாத்திரை நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மட்டக்களப்பு கல்வியங்காடு இந்து மயானத்தில்தகனக்கிரியை நடைபெறுமென அவரது புதல்வர் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் த.மதிவேந்தன் தெரிவித்தார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முக்கியமான செயற்பாட்டாளராகத் திகழ்ந்தவர். சிறந்த கலை இலக்கிய வாதி. மேடைப் பேச்சாளர். இவரது நகைச்சுவைப் பேச்சு அவையை அதிரவைக்கும்.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராக பன்னெடுங்காலமாக சேவையாற்றிவர். இன்றும் பாடப்படும் அப்பாடசாலையின் பாடசாலை கீதத்தை இயற்றிய பெருங் கவிஞராவார்.

சித்தாண்டியை பிறப்பிடமாகக் கொண்டு காரைதீவில் வாழ்ந்த திரு பொன்.தவநாயகம் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய ஆசிரியராக விடுதி மேலாளராக மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் பகுதிநேர தமிழ் விரிவுரையாளராக பணியாற்றினார்.

கிழக்கில் ஆளுமைகள் பலரையும் உருவாக்கிய பெயர்பெற்ற ஆசிரியர்களுள் ஒருவர். மிதவாதத் தமிழ்த் தேசியக் கருத்தியலில் ஆழமான பற்றுக் கொண்டு தனது மேடைப் பேச்சினூடாகத் தமிழ்த் தேசியச் சிந்தனைகளை மக்கள் மயப்படுத்திய ஆளுமைகளுள் ஒருவர். கலைஞர், எழுத்தாளர் எனப் பன்முக ஆற்றல்களுடன் செயலாற்றியவர்.

# இந்தியாவை சுற்றியுள்ள நாடுகளில் அடுத்தடுத்து ஆட்சி மாற்றங்கள்

## புதுடில்லி இதனை எவ்வாறு நோக்குகின்றது?

இஷாத்ரிதா லஹரி



பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ், நியூயார்க்கில் ஐநா பேரவை கூட்டத்தின் போது அமெரிக்க அதிபர் ஜோ பைடனை சந்தித்தார்.

ஜோ பைடன் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு, இரு தலைவர்களுக்கும் இடையே காணப்படும் நட்புறவை சுட்டிக்காட்டியுள்ளது. பங்களாதேஷின் மறுசீரமைப்புக்கு யூனுஸ் 'அதிக முயற்சிகளை' மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

ஒகஸ்ட் மாதம் நடந்த போராட்டங்களுக்குப் பிறகு, பங்களாதேஷ் பிரதமர் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவுக்கு வந்தார். அதன் பின்னர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது.

இந்த அரசின் தலைவராக முகமது யூனுஸ் உள்ளார். நியூயார்க்கில் யூனுஸ் மற்றும் பைடன் இடையேயான நட்பு மோடி அரசுக்கு கவலையை ஏற்படுத்தக் கூடும்.

தற்போது மாறிவிட்ட சூழ்நிலையில் பங்களாதேஷின் புதிய அரசுடன் உறவை ஏற்படுத்த மோடி அரசு முயற்சிக்கிறது.

சமீப ஆண்டுகளில் அதிகார மாற்றம் ஏற்பட்டுள்ள இந்தியாவின் அண்டை நாடுகளில் பங்களாதேஷ் ஒன்றாகும். அண்டை நாடுகளில் ஏற்பட்டுள்ள இந்த அதிகார மாற்றங்கள் காரணமாக அந்த நாடுகளுடனான இந்தியாவின் உறவு சிறிதே ஆட்டம் கண்டுள்ளது.



கடந்த வாரம் இலங்கையின் புதிய ஜனாதிபதியாக இடதுசாரித் தலைவரான அநுர குமார திசநாயக்க தெரிவு செய்யப்பட்டார். 2023 இல் நேபாளத்திலும், 2021இல் மியான்மரிலும், 2023 இல் மாலத்தீவுகளிலும் 2021இல் ஆப்கானிஸ்தானிலும் அதிகார மாற்றம் நடந்துள்ளது.

மறுபுறம் சீனா மற்றும் பாகிஸ்தானுடனான இந்தியாவின் உறவிலும் பதற்றம் காணப்படுகிறது.

நரேந்திர மோடி 2014இல் ஆட்சிக்கு வந்த பிறகு அவரது அரசு 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' (Neighbourhood first) கொள்கையைத் தொடங்கியது. அண்டை நாடுகளுடன் இந்தியாவின் உறவை மேம்படுத்துவதே இந்தக் கொள்கையின் நோக்கம்.

இந்தியாவின் அண்டை நாடுகளில் ஏற்பட்ட சமீபத்திய ஆட்சி மாற்றங்கள் இந்தக் கொள்கையின் செயல்திறனை சோதித்துள்ளன.

சமீப காலமாக இந்தியா பல அண்டை நாடுகளுடன் பிரச்னைகளை கொண்டுள்ளது. மாலத்தீவு அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட முகமது முய்சு, 'இந்தியா அவுட்' என்ற முழக்கத்தை முன்வைத்து வெற்றி பெற்றார்.

அதன் பிறகு முய்சு பல ஆண்டுகளாக இருந்து வந்த ஒரு பாரம்பரியத்தை உடைத்தார். இந்த பாரம்பரியத்தின் படி, மாலத்தீவில் பதவியேற்ற பிறகு ஒவ்வொரு அதிபரும் முதலில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வார்கள்.

ஆனால் முய்சு தனது முதல் சுற்றுப்பயணத்திற்கு துருக்கியைத் தேர்ந்தெடுத்தார். இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனாவுக்குச் சென்ற பிறகு முய்சு மாலத்தீவில் இருக்கும் இந்தியப் படைகளை திரும்பப் பெறுமாறு இந்தியாவை கேட்டுக் கொண்டார்.

அவரது கோரிக்கையை ஏற்று இந்தியா தனது படைகளை திரும்பப் பெற்றது. ஆனால் ஜூலையில் முய்சுவின் அணுகுமுறையில் சிறிது மாற்றம் காணப்பட்டது. இந்தியாவை தனது நெருங்கிய நட்பு நாடு என்று வர்ணித்த அவர் பொருளாதார உதவியையும் நாடினார்.

இதேபோல், 2020 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையிலான உறவுகளும் மோசமடைந்தன. நேபாளத்தின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறது என்று அப்போது நேபாள பிரதமர் கேபி ஷர்மா ஒலி கூறியிருந்தார்.

2024 ஆம் ஆண்டில் ஒலி மீண்டும் நேபாளத்தின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மெதுவாக இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன.

கடந்த வாரம் ஐநா பேரவை கூட்டத்தின் போது ஒலியும் மோதியும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது என இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான உறவுகள் மிகவும் வலுவாக இருப்பதாகவும், இந்த உறவுகளுக்கு மேலும் வேகத்தை அளிக்கும் திசையில் தாங்கள் நகர்ந்து வருவதாகவும் பிரதமர் மோதி தெரிவித்துள்ளர்.

தாலிபனை ஆப்கானிஸ்தானின் சட்டபூர்வ அரசாக இந்தியா இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் ஆப்கானிஸ்தானில் தூதாண்மை பணிகளை தொடரும் 15 நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் உள்ளது.

இப்போது இறுதியாக பங்களாதேஷ் பற்றிப் பேசுவோம். முகமது யூனுஸ் ஆட்சிக்கு வந்த பிறகு இந்தியா சற்றே பின்வாங்கிய நிலையில் இருந்தது. ஷேக் ஹசீனாவின் அரசுடன் இந்தியா நல்லுறவைக் கொண்டிருந்தது.

ஆனால் பங்களாதேஷில் ஹசீனாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடங்கியபோது அங்குள்ள மக்கள் இந்தியாவை சந்தேகக்கண்ணுடன் பார்க்கத் தொடங்கினர். பிரதமர் மோடி மற்றும் யூனுஸ் இருவரும் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆயினும் அதன் திசை என்னவாக இருக்கும் என்பது தற்போது தெளிவாக இல்லை.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற பெரிய நாடுகளுடனான உறவுக்கு அளித்த முன்னுரிமையை அண்டை நாடுகளுடனான உறவுகளுக்கு இந்தியா அளிக்கவில்லை என பல நிபுணர்கள் கருதுகின்றனர்.

மூத்த பத்திரிகையாளரும், 'தி இந்து' நாளிதழின் தூதாண்மை விவகாரங்களுக்கான ஆசிரியருமான சுஹாசினி ஹைதர், "அண்டை நாடுகளுடனான உறவுகள் இந்தியாவுக்கு ஒருபோதும் எளிதாக இருந்ததில்லை. கடந்த 10 ஆண்டுகளில் அரசு அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்று பேசியது. ஆனால் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. எனவே இந்த நாடுகள் தன்னைப்பற்றி ஆக்கபூர்வமாக உணரும் என்று இந்தியா எதிர்பார்க்கக் கூடாது" என்றார்.

"தனது வெளியுறவுக் கொள்கையை அண்டை நாடுகளின் அரசுகள் எப்போதும் ஏற்றுக் கொள்ளும் என்ற மாயையில் இந்தியா இருக்கக் கூடாது. இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை அண்டை நாடுகள் மீது திணிக்க முடியாது. தொடர்ந்து மாறிவரும் சூழலில் இருந்து இந்தப் பாடத்தை அரசு கற்றுக்கொண்டு வருகிறது," என்று சுஹாசினி ஹைதர் தெரிவித்தார்.

ஆனால் அதே நேரம், நாட்டின் 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' கொள்கை மிகவும் ஆற்றல் வாய்ந்தது என்று வங்கதேசத்திற்கான முன்னாள் இந்திய தூதர் வீணா சிக்ரி கூறுகிறார்.

"இந்தக் கொள்கை மிகவும் பொறுப்பு வாய்ந்தது மற்றும் நெகிழ்வுத்தனமை கொண்டது. நாம் (இந்தியா) எந்த சூழலையும் அனுசரித்துச் செல்ல முடியும். மாலத்தீவில் முய்சுவின் 'இந்தியா அவுட்' கொள்கையை இந்தியா எப்படி எதிர்கொண்டது என்பது இதற்கு சிறந்த உதாரணம். மெல்லமெல்ல எல்லாம் சரியாகிவிட்டது." என்று அவர் குறிப்பிட்டார்.

"இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது இந்தியா நிதி உதவி வழங்கியது. வங்கதேசத்தின் இடைக்கால அரசுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகவும் இந்தியா கூறியுள்ளது," என்றார் வீணா சிக்ரி.

"அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கை இப்போது விரிவடைந்துள்ளது மற்றும் முதிர்ச்சியடைந்துள்ளது என்பதற்கான ஒரு பெரிய அறிகுறியாகும் இது. இந்தக் கொள்கை கடந்த சில ஆண்டுகளாக சோதிக்கப்பட்டது மற்றும் அந்த சோதனை வெற்றியும் பெற்றுள்ளது," என்று அவர் கூறினார்.

அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் பல காரணங்களால் பாதிக்கப்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த நாடுகளில் ஏற்படும் உள்நாட்டு மாற்றங்கள் மற்றும் அவற்றின் ஜனநாயகமயமாக்கல் ஆகியவை இதில் அடங்கும்.

"இந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள அதிகார மாற்றம் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் சவால்களை அதிகப்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை" என்று டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்வரண் சிங்.

"ஆனால் இந்த மாற்றங்களுக்குக் காரணம் இந்தியா அல்ல. அண்டை நாடுகளின் உள்நாட்டுக் கொள்கைகள்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்," என்றார் அவர்.

"அமெரிக்காவுக்கு மெக்ஸிகோ மற்றும் கனடா ஆகிய இரண்டு பெரிய அண்டை நாடுகள் மட்டுமே உள்ளன. ஆனால் இந்தியா பாகிஸ்தானைத் தவிர வேறு பல சிறிய நாடுகளால் சூழப்பட்டுள்ளது," என்று ஸ்வரண் சிங் குறிப்பிட்டார்.

(6ஆம் பக்கம் பார்க்க...)

# மீண்டும் தோல்வில் முடிவடைந்த ரணில் - சஜித் இணைப்பு முயற்சி

## எட்டு சுற்று பேச்சுக்களில் இரு விடயங்களில் தொடர்ந்த முரண்பாடு

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயற்படுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியேறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இரண்டு அணிகளும் தனித்தனியாக தேர்தல் களத்தில் இறங்கப்போவதும் உறுதியாகியுள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் இணைந்து நவம்பர் 14 இல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தனிக் கூட்டணியாகப் போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில் ஐ.தே.க. சார்பில் அதன் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன மற்றும் முனனாள் எம்.பி. தலதா அத்துக்கொரளை ஆகியோர் ஈடுபட்டிருந்தனார். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பிலும் உயர் குழு ஒன்று பேச்சுக்களில் ஈடுபட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியதுடன், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவித்திருந்தது. எட்டு சுற்றுக்கள் வரை இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் தங்கள் தங்கள் சின்னத்தில் போட்டியிட இரு குழுக்களும் பிடிவாதமாயிருந்தன. அத்துடன் சஜித் பிரேமதாச நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றால் அவருக்கு பிரதமர் பதவியும், தோல்வியடைந்தால் அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் வழுங்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விலகி, பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தனவுக்கு தலைமைப் பதவி வழங்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிந்தது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு சம்மதம் தெரிவிக்காததால் பேச்சுவார்த்தை முறிவடைந்துள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான ஆவணங்கள் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் காலியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே கட்சியின் தலைவராக நீடிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்டத் தலைவர், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1994 முதல் 30 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து சுமார் 40 தேர்தல்களில் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க, கடந்த வாரம் தான் போட்டியிட்ட மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்துள்ள நிலையில், ஐ.தே.கவும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ரணில் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடத் தயாரில்லை, குறைந்த பட்சம் தேசியப்பட்டியலில் இருந்து நாடாளுமன்றத்துக்கு வரத் தயாரில்லை. அரசியல் ரீதியில் ஓய்வு எடுக்க ரணில் தீர்மானித்துள்ளதாக ஐ.தே.க.வின் உப தலைவர் ருவான் விஜேவர்தன அறிவித்த போதும் தற்போது அது சாத்தியமற்றதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ரணில் விக்ரமசிங்க கட்சித் தலைமையிலிருந்து விலகினால் இணைந்து செயற்படுவதற்கான விருப்பம் தெரிவிக்கப்பட்ட போதும் அதற்கான எந்த பதிலையும் ரணில் விக்ரமசிங்க வழங்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவை சுற்றியுள்ள நாடுகளில்............

இது 'ஸ்மால் ஸ்டேட் சிண்ட்ரோம்' என்ற சூழ்நிலையை உருவாக்குகிறது. இந்தியா தங்களை அதிகாரம் செய்யப் பார்ப்பதாக அண்டை நாடுகள் கருதுகின்றன. இந்த குட்டி நாடுகளில் ஜனநாயகம் வலுப்பெறும் போது, இந்தியாவின் முன் உறுதியாக நிற்பது இந்த நாடுகளின் அடையாளத்தின் ஒரு பகுதியாக மாறும்," என்றார் அவர்.

உதாரணமாக பூடானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் எப்போதும் சிறப்பாகவே உள்ளன. ஆனால் அங்கு தேர்தல் நடத்தப்படும்போது, இந்தியாவுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்படுகின்றன.

நேபாளம், பங்களாதேஷ் மற்றும் மாலத்தீவுகள் போன்ற எல்லா சிறிய நாடுகளும் சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளிலிருந்தும் 'சம தூரம்' என்ற கொள்கையை பின்பற்றுகின்றன.

இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுடனும் உறவைப் பேணுவதற்கு இந்த சிறிய நாடுகள் சமச்சீர் நிலையை பராமரிக்கின்றன. இதன் காரணமாக கடன் பிரச்னை, உணவு மற்றும் தண்ணீர் போன்ற அடிப்படை ஆதாரங்களின் பற்றாக்குறை போன்ற கடினமான சூழ்நிலைகளுக்கு அவைகள் தள்ளப்படுகின்றன என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால் சமச்சீர் நிலையை பேணும் இந்த முயற்சி இந்த சிறிய நாடுகளுக்கு இந்தியா மற்றும் சீனாவுடன் பேரம் பேசவும் வாய்ப்பளிக்கிறது.

அண்டை நாடுகளின் உள்நாட்டு மாற்றங்களை இந்தியாவால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் பங்களாதேஷ் போன்ற சில விஷயங்களில் இந்தியாவின் தொலைநோக்கு பார்வையின்மை தெளிவாகத் தெரிகிறது.

"மோடி அரசால், இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே பிராந்திய புவிசார் அரசியலில் மாற்றங்களை கொண்டு வர முடியாது என்பதை அண்டை நாடுகளில் ஏற்படும் சாதகமற்ற ஆட்சி மாற்றங்கள் காட்டுகின்றன," என்று சுஹாசினி ஹைதர் கூறுகிறார்.

"அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து பேசுகிறது. ஆனால் அது தன் அண்டை நாடுகள் மீதும் கவனம் செலுத்த வேண்டும்." என்கிறார் அவர்.

பங்களாதேஷ் நிகழ்வு மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. ஏனெனில் இந்திய ஹைகமிஷனுடன் கூடவே அந்த நாட்டில் நான்கு தூதரக அலுவலகங்களும் உள்ளன. இருந்த போதிலும் இந்தியாவால் அங்குள்ள நிலைமையை சரியாக மதிப்பிட முடியவில்லை.

"பங்களாதேஷில், இந்தியா ஒரு தரப்புடன் மட்டுமே தொடர்பில் இருந்தது. நாட்டிற்குள் இருந்த எதிர்ப்பை புறக்கணித்தது. இந்த தவறுக்கான விலையை இந்தியா இப்போது அளிக்கிறது," என்று சுஹாசினி ஹைதர் குறிப்பிட்டார்.

மாறாக இலங்கையின் அரசியல் சூழ்நிலையை இந்தியா சிறப்பாகக் கையாண்டது. ஏனெனில் பிரதமர் மோடி, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்பே அநுர குமார திஸாநாயக்கவை இந்தியாவுக்கு அழைத்தார் என்று ஹைதர் கூறுகிறார்.

"இலங்கையில் அதானியின் திட்டம் போல பல அண்டை நாடுகளில் இந்தியர்களின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட திட்டங்களை ஆதரித்தால் அது விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்," என்று அவர் குறிப்பிட்டார்.

அண்டை நாடுகளுடனான உறவில் இந்தியா மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவு சாதகமாக இருப்பதாகவும், நமது வெளியுறவுக் கொள்கை எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் என்றும் வீணா சிக்ரி கூறுகிறார்.

"உலகம் முழுவதும் அரசுகள் மாறுகின்றன. ஆனால் இந்தியாவின் நற்பெயரைக் காப்பாற்றக் கூடிய அளவுக்கு நாம் செயல்புரிய வேண்டும். இந்த மாற்றங்களுக்கு ஏற்ப நமது வெளியுறவுக் கொள்கை அமைய வேண்டும்." என்கிறார் வீணா.

இந்தியாவின் உள்நாட்டு கொள்கைகளும் அண்டை நாடுகளுடனான உறவின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை இந்தியா உணர வேண்டும் என்கிறார் சுஹாசினி ஹைதர்.

"இந்தியா அண்டை நாடுகளில் ஒரு தலைவராக பார்க்கப்படுகிறது. கருத்துகள் மற்றும் லட்சியங்களைக் கொண்ட, ஒரு வழிகாட்டி நாடு. எனவே, குடியுரிமைச் சட்டத் திருத்தம் (சிஏஏ) போன்ற இந்தியாவின் கொள்கைகள் அதன் அண்டை நாடுகளையும் பாதிக்கின்றன," என்று அவர் குறிப்பிட்டார்.

"சிஏஏ அறிவிக்கப்பட்டபோது வங்கதேசத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஷேக் ஹசீனாவின் அரசு சிஏஏவை ஏற்றுக்கொண்டாலும் அங்குள்ள மக்கள் அதை எதிர்த்ததால் அது இந்தியாவின் பிம்பத்தை பாதித்தது. அதிகாரத்தில் உள்ளவர்களுடன் தொடர்பில் இருந்தால் மட்டும் போதாது. இந்த நாட்டு மக்களின் இதயங்களையும் நாம் வெல்ல வேண்டும்." என்று சுஹாசினி கூறுகிறார்.

இதற்கு அடிப்படை மந்திரம் பொறுமை என்று பேராசிரியர் ஸ்வரண் சிங் சுட்டிகாட்டினார்.

"நேபாளத்தில் ஒலி மற்றும் வங்கதேசத்தில் யூனுஸ் விவகாரத்தில் இந்தியா மிகவும் பொறுமையைக் காட்டியது. கொந்தளிப்பான சூழ்நிலையிலும் இந்தியா நிதானத்துடன் செயல்பட்டு வருகிறது. அண்டை நாடுகளுடனான மோசமான உறவுகள் தனக்கு தீங்கு விளைவிக்கும் என்பதை இந்தியா அறிந்திருக்கிறது. ஏனென்றால் இதுபோன்ற சூழ்நிலையில் தனது செல்வாக்கை அதிகரிக்க சீனாவுக்கு வாய்ப்பு கிடைத்துவிடும்," என்று அவர் விளக்கினார்






# லெபனானில் தாக்குதலை தீவிரப்படுத்தும் இஸ்ரேல்!

## ஒரே வாரத்தில் 7 முக்கிய தலைவர்கள் உயிரிழப்பு




லெபனானின் பெய்ஷரூட் நகரின் மத்தியப் பகுதியில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் இன்று காலை நடத்தியுள்ளது. கடந்த ஓராண்டாகவே இஸ்ரேல் - லெபனான் இடையே மோதல் நிலவிவந்தாலும், கடந்த ஒருவார காலமாக தீவிரத் தாக்குதல் நடந்து வருகிறது.

லெபனானின் பெய்ஷரூட் நகரின் மத்தியப் பகுதியில் இஸ்ரேல் இன்று திங்கள்கிழமை காலை நடத்திய வான்வழித் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இஸ்ரேல் தாக்குதல் தீவிரமடையும் சூழலில் ஒரே வாரத்தில் நஸ்ரல்லா உள்பட 7 முக்கியத் தலைவர்கள் உயிரிழந்தனர்.

கடந்த ஓராண்டாகவே இஸ்ரேல் - லெபனான் இடையே மோதல் நிலவிவந்தாலும், கடந்த திங்கள்கிழமை முதல் தீவிரத் தாக்குதல் நடந்து வருகிறது. அதிலும் முதன்முறையாக இன்று திங்கள்கிழமை காலை பெய்ஷரூட் நகரின் மத்தியப் பகுதியான கோலாவில் குடியிருப்புகள் நிரம்பிய இடத்தில் இஸ்ரெல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் 4 பேர் இறந்தனர். இவர்களில் மூன்று பேர் பாலஸ்தீன விடுதலை பாப்புலர் முன்னணி (PPLF) என்ற ஆயுதக் குழுவின் முக்கியத் தலைவர்கள் என அந்த அமைப்பு உறுதி செய்துள்ளது.

கடந்த 2006-ம் ஆண்டுக்குப் பிறகு மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கையாக இஸ்ரேல் ராணுவம் கடந்த திங்கள்கிழமை லெபனானின் தெற்கு பகுதி நகரங்கள் மீது குண்டு மழை பொழிந்தது. லெபனானின் ஹெர்மல், பிப்லேஸ், பால்பெக் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளதை இஸ்ரேல் உளவுத் துறை கண்டறிந்ததையடுத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது என அந்நாட்டு ராணுவம் தெரிவித்து வருகிறது.

லெபனான் நாட்டில் கடந்த 1985-ம் ஆண்டில் ஹிஸ்புல்லா அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்புக்கு ஈரானும் சிரியாவும் ஆயுத உதவி, நிதியுதவி அளித்தன. இரு நாடுகளின் உதவியால் ஹிஸ்புல்லா குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்தது.

கடந்த 2006-ம் ஆண்டில்ஹிஸ்புல்லாவுக்கும் இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையே 34 நாட்கள் போர் நடைபெற்றது. அப்போது ஐ.நா. சபை தலையிட்டதால் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

1030 பேர் பலி.. இந்நிலையில் கடந்த திங்கள்கிழமை தொடங்கி ஒரு வாரமாக இஸ்ரேல் லெபனான் மீது நடத்திவரும் தாக்குதலில் 87 குழந்தைகள், 156 பெண்கள் உள்பட 1030 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை முதல் தொடர் தாக்குதல் நடந்துவரும் நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மட்டுமே 105 பேர் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. பால்பெக் ஹெர்மல், சிடோன், கலீ, ஹாஃபியா பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து இன்று (செப்.30) காலை பெய்ஷரூட்டின் மத்தியப் பகுதியான கோலாவில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதேபோல் ஏமனில் ஹவுத்திப் படைகளின் இலக்குகளையும் குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இன்றைய தாக்குதல் குறித்து இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "லெபனானின் பெக்கா பிராந்தியத்தில் இன்று காலை வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயுதங்கள் பதுக்கிவைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சில இடங்களைக் குறிவைத்து அழித்துள்ளோம். அந்த இடங்கள் ஹிஸ்புல்லாக்களுடன் தொடர்புடையவை" என்று தெரிவித்துள்ளது.

**பாகிஸ்தானில் போராட்டம்:**

ஈரான், சிரியாவின் ஆதரவுடன் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா, லெபனானின் ரகசிய இடங்களில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். ஈரானின் மூத்த தலைவர்கள், ஹிஸ்புல்லாவின் மூத்த தலைவர்களுக்கு மட்டுமே அவரின் இருப்பிடம் தெரியும். இந்நிலையில் அவர் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டது உறுதியானது. முன்னதாக ஹிஸ்புல்லா ட்ரோன் பிரிவுத் தலைவர் உள்ளிட்ட பலரும் கொல்லப்பட்டனர்.

நஸ்ரல்லா கொல்லப்பட்டதைக் கண்டித்து பாகிஸ்தானில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கராச்சியில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்தை நோக்கி முன்னேறிய போராட்டக்காரர்கள் மீது போலீஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி போராட்டத்தைக் கலைத்தனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்





# பொத்துவில் களுகொல்ல ஜீவா அன்பளிப்பில் குழாய் நீர் வசதி

(வி.ரி. சகாதேவராஜா)

பொத்துவில் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய களுகொல்ல கிராமத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு குழாய் நீர் விநியோகத்தை சுவிட்சர்லாந்தில் வாழும் பாண்டிருப்பைச்சேர்ந்த திருமதி ஜீவா விஜி திரைநீக்கம் செய்து மக்களிடம் ஒப்படைத்தார்.

சிவஜோதி அமைப்பின் தலைவர் மதி மற்றும் செயலாளர் நந்தினி தலைமையில் இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

ஒரு லட்சத்து 90 ஆயிரம் ஷரூபாய் செலவில் இக் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஜீவாவின் நெருங்கிய தோழி அலா நுஸ்ரத்டினோரே

யுடடயா ரேளவசநவ னுலழெசந இதற்கான உதவியை வழங்கினார்.

இந்நிகழ்வில் சமுக செயற்பாட்டாளர் களான கி. ஜெயசிறில், வா. குணாளன், எஸ்.அருளம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

களுகொல்ல ஊர்ப் பொதுமக்கள் பல கருத்துக்களை முன் வைத்தார்கள். பொதுவான கட்டடங்கள் மண்டபங்களின் இல்லாத குறையை நிவர்த்தி செய்து தர வேண்டும் என்ற விடயத்தை கூறினார்கள்.

திருமதி ஜீவா உரை நிகழ்த்துகையில், “மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இக் கிராமமக்கள் வாழ்ந்து வருவது கவலைக்குரியது. நிச்சயமாக எதிர்வரும் காலங்களில் இங்குள்ள தேவைகளை படிப்படியாக செய்து தரலாமென நினைக்கிறேன் என்று கூறினார் .

புலம்பேர் பெருமளவான பணத்தை இதற்கான செயல்பாடு செய்ய முடியாது என்றும் அரசு நிதியை பயன்படுத்தி இந்த பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பேன்” என்றும் கூறினார்.



# தியத்தலாவ ரிஸ்னாவுக்கு கௌரவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பன்னூலாசிரியர் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா, கலை இலக்கியத் துறையில் ஆற்றி வரும் பங்களிப்புகளுக்காக “இலக்கியத் தென்றல், லங்கா புத்திர, தேசபந்து” ஆகிய கௌரவப் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சர்வதேச மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனத்துடன் இணைந்து, “தேசிய கலை அரண்”அமைப்பின் ஏற்பாட்டில் “வாழும் போதே வாழ்த்துவோம்’ என்ற தொனிப் பொருளில் 250 கலைஞர்களை கௌரவிக்கின்ற நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போதே, மலையகத்தைச் சேர்ந்த எச்.எப். ரிஸ்னா பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொழிற்சங்க சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகமாகச் செயற்பட்ட சமன் ரத்னப்பிரிய பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதோடு, இந்திக விஜய் ரத்ன, மாநகர முதல்வர் சுஜீவ மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் வெளிநாட்டு விவகாரப் பணிப்பாளர் சுனில் பெரேரா, கண்ணகி கலாலயத்தின் தலைவர் இளங்கோ உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2024இல் வெளியிடப்பெற்றது.